# தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

**எண் 21/ 2022** **நாள்: 24/03/2022**

தெரிவு முடிவுகளைத் துரிதப்படுத்தும்பொருட்டு, தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி – I, II மற்றும் IV பணிகளில் அடங்கிய பதவிகள் நீங்கலாக மற்றைய அனைத்து நேரடி நியமனங்களுக்கான பதவிகளுக்கும் இணைய வழியில் விண்ணப்பம் செய்வதில் கீழ்க்காணும் புதிய நடைமுறை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செயல்படுத்தப்படவுள்ளது:-

i) விண்ணப்பதாரர்கள் இணைய வழியில் விண்ணப்பம் சமர்ப்பிக்கும்பொழுதே, அவர்களால் இணையவழி விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் / உரிமை கோரல்களுக்கு (claim) ஆதாரமான அனைத்துத் தேவையான சான்றிதழ்களையும் இணைய வழி விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ii) விண்ணப்பதாரர் இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்பொழுதே, அனைத்து ஆதார சான்றிதழ்களையும் / ஆவணங்களையும் PDF வடிவத்தில் அதாவது (ஒன்று அல்லது பல பக்கங்கள் கொண்ட) 200 KBக்கு மிகாமல் உள்ள ஒரு PDF ஆவணமாக ஒவ்வொரு உரிமை கோரலுக்கும் ஆதாரமாகக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

iii) பதிவேற்றம் செய்யப்படவேண்டிய ஆவணங்கள் / சான்றிதழ்கள் குறித்த தகவல்கள் நேரடி நியமனங்களுக்காக தேர்வாணையத்தால் வெளியிடப்படும் அறிவிக்கைகளில் காணப் பெறலாம்.

...2.

iv) விண்ணப்பதாரர் இ-சேவை மையங்கள் உள்ளிட்ட அனைத்து வழிகளிலும் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் தேவையான சான்றிதழ்களை / ஆவணங்களைப் பதிவேற்றம் செய்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். எனவே, இனி வருங்காலங்களில் தேர்வாணையத்தின் அறிவிக்கைகளின் அடிப்படையில் விண்ணப்பிக்க விரும்பும் அனைத்துத் தேர்வர்களும் தங்களது சான்றிதழ்கள் அனைத்தையும் மேற்குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்ய ஏதுவாக, முன்னரே scan செய்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

v) பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களை விண்ணப்பதாரர் தங்களது ஒருமுறைப் பதிவின் (One Time Registration) மூலம் சரிபார்த்துக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏதேனும் சான்றிதழ்கள் தவறாகப் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்படாமல் இருந்தாலோ விண்ணப்பதாரர் விண்ணப்பித்திருந்த பதவிக்கான தேர்வு அனுமதிச் சீட்டினை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் நாளுக்கு இரண்டு நாள்கள் முன்னர் வரை (அதாவது தேர்வு நடைபெற உள்ள தேதிக்கு 12 நாள்கள் முன்னர் வரை) சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய / மறு பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

vi) ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ, தேவையான ஆதார ஆவணங்களைப் (சரியாகவும் / தெளிவாகவும் / படிக்கக்கூடியதாகவும்) பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரரின் இணையவழி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

vii) எழுத்துத் தேர்விற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சான்றிதழ் சரிபார்ப்புப் பணியானது முற்றிலும் விண்ணப்பதாரரால் இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் / ஆவணங்களின் அடிப்படையிலேயே அமையும். எழுத்துத் தேர்விற்குப் பின்னர்

சான்றிதழ் பதிவேற்றம் செய்வது தொடர்பாக தனியாக எந்த அறிவிப்பும் தேர்வாணையத்தால் அனுப்பப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்கள்/ ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வதில் அதிக அக்கறையுடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இது தொடர்பாக விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் விளக்கம் தேவைப்படின், helpdesk@tnpscexams.in / grievance.tnpsc@tn.gov.in என்ற தேர்வாணையத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தேர்வாணையத்தின் 1800 419 0958 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு (Toll free Number) அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.

செயலாளர்

**TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION**

**PRESS RELEASE**

**No. 21/ 2022** **Dated 24/03/2022**

The following new procedure will be implemented by the Tamil Nadu Public Service Commission for applying online application for direct recruitments except for the posts included in Group – I, II and IV Services in order to speed up the process of selection:-

i) The candidates are required to upload all the documents / certificates at the time of application process itself in support of the claim made in their online application.

ii) The candidates should mandatorily upload the certificates / documents at the time of submission of online application itself in PDF format i.e. one PDF file of not more than 200KB (with single or multiple pages) in support of each claim.

iii) The details of the documents / certificates to be uploaded can be found in the notification of recruitment.

iv) The uploading of documents shall be permitted from all sources including e-seva centres. It shall be ensured by the candidates that the online application is submitted by uploading all the required certificates. Therefore, in future, the candidates who wish to apply for direct recruitment to the posts on the basis of the notification issued by Commission are advised to scan all the required documents as mentioned in the notification in advance so that they can upload the same during the time of online application.

v) The candidates shall have the option of verifying the uploaded certificates through their OTR. If any of the documents have wrongly been

…2.

uploaded or not uploaded or if any modifications are to be done in the uploading of documents, the candidates shall be permitted to upload / re-upload the documents till two days prior to the date of hosting of hall tickets for that particular post. (i.e. twelve days prior to the date of examination)

vi) The online application of the candidates who have not uploaded the required supporting documents (correctly / clearly / legibly) on or before the stipulated date shall be rejected.

vii) The certificate verification process after the written examination will be purely based on the certificates / documents uploaded at the time of Application stage. There will not be any further intimation / communication separately for uploading the certificates after the examination. Hence, the candidates shall take utmost care and caution in uploading the certificates / documents correctly.

If any further information is required, applicants are requested to send mail to helpdesk@tnpscexams.in / grievance.tnpsc@tn.gov.in or contact the toll free Number i.e. 1800 419 0958 on all working days from 10.00 a.m. to 5.45 p.m.

P. Uma Maheswari, I.A.S.
Secretary